`Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 146 /2018
**Deposition of P.W.8**

Name : கவிதா

Father's Name : வேலாயுதம்

Village : திருச்சி

Age : **48/2024**

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 10.01.2024**
(1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1 முதல் 5 வரையான எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி, கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.01.2018ம் தேதி ஆலங்குடி அனைத்து மகளிர் காவல்நிலைய காவல் ஆய்வாளராக பொறுப்பேற்று நிலைய குற்ற எண் 4/17 வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்தபோது சாட்சிகள் முந்தைய காவல் ஆய்வாளரிடம் அளித்த வாக்குமூலங்களையே என்னிடமும் அளித்ததால் அவைகளை நான் தனியாக பதிவு செய்யவில்லை. 7.08.2018 ம் தேதி மாவட்ட சமூக நல அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே 1வது எதிரி இரண்டாவது செய்து கொண்டதற்கான திருமண அழைப்பிதழை அச்சிட்டுக்கொடுத்த மன்னார்குடியைச் சேர்ந்த செல்வக்குமார் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்த வகையில் சம்பவம் உண்மை என தெரிந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 498(ஏ),494,உ/இ வரதட்சணை தடுப்புச்சட்டம் பிரிவு 4 என்பதிலிருந்து இதச பிரிவுகள் 498(ஏ),494,உ/இ 109 ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதலறிக்கை தயார் செய்தேன். பின்னர் புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு இதச பிரிவுகள் 498(ஏ),494,உ/இ 109 கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 ராணி அளித்த வாக்குமூலத்தில் 1வது எதிரி 2ம் திருமணம் செய்துகொண்டார் என்ற விபரத்தை எனது தந்தை விசாரித்து என்னிடம் சொன்னார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 1வது எதிரிக்கும் அ.சா.1 ராணி என்பவருக்கும் இடையே விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வந்தது என்ற விபரத்தை எனது விசாரணையின்போது தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். 1வது எதிரி 2ம் திருமணம் செய்துகொண்டார் என்பதற்காக அச்சிடப்பட்டதாக கூறப்படும் திருமண அழைப்பிதழ் அச்சிடப்பட்ட அச்சகத்திற்கு பணம் கொடுத்ததற்கான ரசீது எதுவும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அச்சகங்களில் பொதுவாக யார் சென்று திருமண அழைப்பிதழ் அச்சடித்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டால் அச்சடித்து தருவது வழக்கம் என்றால் சரிதான். 1வது எதிரிக்கு 2வது திருமணம் நடந்ததாக கூறப்படும் விழுப்புரம்,

செம்மங்கலத்தில் உள்ள திருமண மஹாலை சேர்ந்த நபர்களை விசாரித்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி திருமண மஹாலில் திருமணம் நடந்ததற்காக கொடுக்கப்படும் மஹால் வாடகை, தொகை குறித்த இரசீது எதுவும் என்னால் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். 19.01.2017 ஆம் தேதி அ.சா.1 புகார் அளித்து அதற்கு மனு ரசீது அளிக்கப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை காலம் 8ல் மனு இரசீது கொடுத்ததுபற்றிய பதிவும் காலதாமதத்திற்கான காரணமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் எந்தெந்த சாட்சிகளை மறுவிசாரணை செய்தேன் என்றால் வாணி, செல்வராஜ்,தசரதன், ரவிக்குமார், சுப்பிரமணியன், சிவநாதன் ஆகியோர்களை விசாரணை செய்தேன். ஆனால் அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை. நான் மேற்படி சாட்சிகளை மறுவிசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கினை முறையாக புலன்விசாரணை செய்யாமல் அ.சா.1 ராணி 1 வது எதிரியான தனது கணவர் தன்னிடமிருந்து விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறுதியறிக்கையில் சொல்லப்பபட்டுள்ளதுபோல் எதிரிகள் எந்த விதமான கொடுமையும் செய்யவில்லை என்றாலும் 1 வது எதிரி 2 வதாக திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**ம.வி.இல்லை**